(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
National Field Work Centre, Thondaimanaru
3rd Term Examination - 2024

கணக்கீடு
Accounting

Three Hours 10 Min

Gr. 12 (2024)

33	T	I

அறிவுறுத்தல்கள்:-

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையினை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
- எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி I

01) கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக அமைவது,

(1) கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகளை இனங்கானலும் அளவீடு செய்தலும்.
(2) நிறுவனத்தின் உள்வாரியான தரப்பினர்களுக்கு தீர்மானம் எடுப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
(3) கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை பதிவு செய்தல், வகைப்படுத்தல் சுருக்குதல்.
(4) நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்.
(5) நிறுவனத்தின் அக்கறை செலுத்தும் தரப்பினர்களுக்கு பொருளாதார தகவல்களை வழங்குதல். (...........)

02) ஒரு வணிக நிறுவனத்தில் இடம்பெற்ற பின்வரும் கணக்கீட்டு செயன்முறையின் சரியான ஒழுங்கு வரிசையாக அமைவது,

A- வரைவு வருமானக்கூற்று, நிதி நிலமைக்கூற்றினை தயாரித்தல்.
B- கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஆவணங்களை தயாரித்தல்.
C- பரீட்சை மீதியில் பதிவு செய்தல்.
D- பேரேட்டு பதிவுகளை மேற்கொள்ளல்
E- மூல ஏடுகளில் பதிவு செய்தல்

(1) ABCDE (2) BCDEA (3) BEDCA (4) EBDCA (5) EDBCA (...........)

03) பின்வருவனவற்றில் எது கணக்கீட்டு எண்ணக்கருசார் சட்டகத்தின் படி விருத்தி செய்யும் கணக்கீட்டின் அளவு சாராப் பண்பாக அமையாதது?

(1) சான்றுபடுத்தக் கூடியது. (2) விளங்கிக் கொள்ளக்கூடியது
(3) பொருத்தமான தன்மை (4) நம்பகத்தன்மை
(5) காலந்தவறாமை (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

04) துஷி வணிகத்திலிருந்து பின்வரும் கணக்கீட்டு சமன்பாடு ஒக்டோபர் 2023ல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்த பின்னர் தரப்படுகின்றது.

சொத்து + செலவு = உரிமை + பொறுப்பு + வருமானம்

400 000 + 60 000 = 300 000 + 90 000 + 70 000

ஒக்டோபர் 2023ல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

4/10 - இருப்புக்கள் காசுக்கு விற்பனை ரூபா 40,000 விற்பனைக்கிரயம் விற்பனை விலையில் 80% ஆகும்.

8/10 – 2023 செப்ரெம்பர் மாதத்திற்காக செலுத்தப்பட்ட வாடகை ரூபா 10,000

12/10 மீள் விற்பனை நோக்கம் கருதிய பொருட்கள் கொள்வனவு ரூபா 30,000

பின்வருகின்ற எக்கணக்கீட்டு சமன்பாடானது நிறுவனத்தின் நிதிநிலமைக் கூற்றினை மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்வதற்கு முன்னர் பிரதிபலிக்கின்றது.

	சொத்து +	செலவு =	உரிமை +	பொறுப்பு +	வருமானம்
(1)	400,000	60,000	300,000	90,000	70,000
(2)	402,000	28,000	300,000	100,000	30,000
(3)	402,000	50,000	300,000	90,000	62,000
(4)	430,000	30,000	300,000	90,000	70,000
(5)	432,000	30,000	300,000	100,000	62,000

(...........)

05) பின்வரும் எண்ணக்கருக்களில் எது / எவை விற்பனை முற்பணத்தினை வருமானமாக இனங்கான முடியாது என வலியுறுத்துகின்றது.

A- அட்டுறு எண்ணக்கரு
B- இணைதல் எண்ணக்கரு
C- தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
D- தேறல் எண்ணக்கரு

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) A யும் B யும் (5) A யும் D யும் (...........)

பின்வரும் தகவல்களைக் கொண்டு வினா இல 6, 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

2023 ஒக்டோபர் மாதத்தில் நயனிகா நிறுவனத்தினால் இருப்புக்கள் கபி நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட விபரம் வருமாறு,

திகதி	கொடுக்கல் வாங்கல்கள்
03.10.2023	ரூபா 90,000 குறித்த விலையுடைய பொருள்கள் 10% வியாபாரக்கழிவுடன் விற்பனை செய்யப்பட்டது. (விற்பனை விலையானது கிரயத்துடன் 20% லாபம் சேர்த்து தீர்மானிக்கப்படுகின்றது)
10.10.2023	ரூபா 8100 பட்டியலிடப்பட்ட இருப்புக்கள் திருப்பி அனுப்பப்பட்டது. இதன்கிரயம் ரூ 6750
15.10.2023	கபி தனது நிலுவையினை கொடுத்து தீர்த்தார்

06) நயனிகா நிறுவனத்தில் மேறகுறிப்பிட்டகொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான மூல ஆவனங்கள் முறையே?

(1) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(2) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
(3) பட்டியல், நாட்குறிப்பு கைச்சாத்து, பற்றுச்சீட்டு
(4) பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்பு கைச்சாத்து
(5) பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்பு கைச்சாத்து (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

07) பின்வருவனவற்றில் எவை கபி நிறுவனத்தில் மேற்குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூல ஏடுகள் முறையே,

(1) கொள்வனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு , காசு கொடுப்பனவு நாளேடு
(2) கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
(3) விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு
(4) விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, பொது நாட்குறிப்பேடு
(5) கொள்வனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு (..........)

08) நயனிகா வியாபார நிறுவனத்தின் தேறிய லாபத்தில் மேற்தரப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் மூலம் ஏற்பட்ட தேறிய விளைவு யாது?

(1) ரூ.12,150 ஆல் அதிகரிக்கும் (2) ரூ.13,500 ஆல் அதிகரிக்கும்
(3) ரூ. 14,580 ஆல் அதிகரிக்கும் (4) ரூ.12,150 ஆல் குறைவடையும்
(5) ரூ.13,500 ஆல் குறைவடையும் (..........)

09) சஞ்ஜய் வியாபார நிறுவனத்தின் 2023 நவெம்பர் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

P - வங்கிக் கடன் தவணைப்பணம் செலுத்தியது ரூபா 20,000
Q- காப்புறுதிப்பூட்கை செலுத்தப்பட்டது ரூ 20,000 நிலையியற் கட்டளை
R- நேரடியாக வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்டது ரூபா 14,000
S- வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு ரூ 20,000 மறுக்கப்பட்ட காசோலை.
T- வங்கியினால் தவறுதலாக செலவு வைக்கப்பட்டது ரூ 8,000.
U- வழங்கப்பட்ட காசோலை மறுக்கப்பட்டது ரூ 6,000

மேற்குறிப்பிட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை எனின் பின்வருவனவற்றில் எவை வங்கி மேலதிகப்பற்றினை தோற்றுவிக்கும்?

(1) PQS மட்டும் (2) PQU மட்டும் (3) PRS மட்டும்
(4) QRS மட்டும் (5) RTU மட்டும் (..........)

10) மது வியாபார நிறுவனம் இருப்புடன் தொடர்புடைய பின்வரும் தகவல்களை 31.03.2023ல் வெளிப்படுத்தியது.

உருப்படி	அளவு அலகுகளில்	அலகு விலை	எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலை	விற்பனைச் செலவு
A	100	30	35	2
B	200	40	45	7
C	150	20	25	3

31.03.2023ல் முடிவடைந்த ஆண்டுக்காக, நிதிநிலமைக் கூற்றில் இருப்பாக வெளிப்படுத்தபட வேண்டிய தொகை, வருமானக்கூற்றில் இருப்பு நட்டமாக பதிவழிப்பு செய்யப்பட வேண்டிய தொகையும்,

	இருப்பு "ரூ"	இருப்பு நட்டம் "ரூ"
(1)	13,600	400
(2)	14,000	–
(3)	14,000	200
(4)	14,000	400
(5)	14,200	200

(..........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

11) மது வணிக நிறுவனம் 31.03.2023 ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வரைவு நிதிக்கூற்றில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டது.

	ரூபா "000'
மொத்த இலாபம்	800
நிர்வாக செலவினம்	350
விற்பனை விநியோக செலவினம்	200
நிதியும் ஏனைய செலவும்	100

வரைவு நிதிக்கூற்று தயாரிக்கப்பட்ட பின்னர் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- காப்புறுதி கட்டணம் உரிமையாளரது ஆயுள் காப்புறுதி கட்டணமாக ரூ 25,000 னையும் உள்ளடக்கியுள்ளது. இது நிர்வாக செலவாக பதியப்பட்டுள்ளது.
- 31.03.2023ல் அட்டுறு செலவினமாக உள்ள மின்சாரம் ரூபா – 15,000 தொலைபேசி ரூ 10,000 கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.
- மோட்டார் வானகங்களுக்கான பெறுமானத் தேய்வு ரூ 30,000 விற்பனை விநியோக செலவினமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இம் மோட்டார் வாகனங்கள் நிர்வாக தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது.

31.03.2023 ல் முடிவடைந்த ஆண்டுக்கான பொருத்தமான சீராக்கங்களின் பின்னர் சரியான நிர்வாக செலவினமும் விற்பனை விநியோக செலவினமும்.

	நிர்வாக செலவு ரூ "000"	விநியோக செலவு ரூ "000"
(1)	170	350
(2)	200	270
(3)	350	200
(4)	380	170
(5)	430	230

(..........)

12) 31.03.2023ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்களை விளையாட்டு கழகம் முன்வைத்துள்ளது.

விபரம்	31.03.2023	31.03.2022
வருமதி சந்தா ரூபா	12,000	15,000
முற்பணமாக பெற்றசந்தா ரூபா	?	3,000

2022/2023 ம் நிதியாண்டில் பெறப்பட்ட சந்தா தொடர்பானவை.

2021 / 2022 க்கானது ரூ 6,000

2022 / 2023 க்கானது ரூ 95,000

2023 / 2024 க்கானது ரூ 5,000

31.03.2023 ல் முடிவடைந்த ஆண்டுக்காக வருமானச் செலவு கணக்கில் சந்தா வருமானமாக வெளிப்படுத்த வேண்டிய தொகை யாது?

(1) ரூ 95,000 *(2)* ரூ 100,000 *(3)* ரூ 101,000

(4) ரூ 106,000 *(5)* ரூ 107,000 (..........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 13, 14, 15ம் வினாக்களுக்கு விடை தருக.**

சாருவும், மதியும் பங்குடமையொன்றின் பங்காளர்களாவர். இவர்களது ஒப்பந்தங்கள் வருமாறு,

- இலாபம் / நட்ட பகிர்வு விகிதம் 2: 1
- மூலதனத்திற்கு வருடாந்தம் 10% வட்டி வழங்கப்படும்.
- பங்காளர் வருடாந்த சம்பளமாக ரூ 50,000 , 40,000 முறையே பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்.

01.04.2022ல் பிரியா புதிய பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார். அவர் தனது மூலதன நன்மதிப்பு பங்களிப்புக்காக ரூ 330,000 இனை கொண்டு வந்தார். புதியலாபம் / நட்டவிகிதம் 2: 2: 1 ஏனைய ஒப்பந்தங்கள் தொடர்ந்து பேணப்படும்.

நன்மதிப்பு சீராக்கத்தின் பின்னர் பங்காளர் மூலதன கணக்கு மீதிகள் வருமாறு

சாரு ரூ 600, 000

மதி ரூ 500, 000

பிரியா ரூ 300, 000

31.03.2023ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் ரூ240,000 நிதியாண்டில் எதுவித பற்றுக்களும் இடம்பெறவில்லை.

13) பங்காளர் பிரியா சேரும் போது பங்குடமையின் நன்மதிப்பு யாது?

(1) ரூ 30,000 *(2)* ரூ 90,000

(3) ரூ 120,000 *(4)* ரூ 150,000

(5) ரூ 330,000 (..........)

14) நன்மதிப்பு சீராக்கத்திற்கு முன்னரான பங்காளர்கள் சாரு, மதியின் மூலதனக் கணக்கு மீதிகள் முறையே,

	சாரு ரூ "000"	மதி ரூ "000"
(1)	560	330
(2)	560	510
(3)	600	500
(4)	610	460
(5)	610	560

15) 31.03.2023ல் பிரியாவின் நடைமுறைக் கணக்கு மீதியும், பங்குடமையின் உரிமையாண்மையும்

	பிரியா நடைமுறைக்கணக்கு ரூ "000"	உரிமையாண்மை ரூ "000"
(1)	30	330
(2)	30	1400
(3)	32	1730
(4)	134	330
(5)	164	1070

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

❖ **16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

16) பின்வரும் கணக்குகளுக்கான பொருத்தமான பேரேட்டுக்கணக்கினை சொத்து, பொறுப்பு, உரிமை, வருமானம், செலவு என வகைப்படுத்துக.

		பேரேட்டுக் கணக்கு
(1)	மதிப்பு குறைப்பு நட்டம்	
(2)	உட் திரும்பல்	
(3)	நடைமுறை அல்லா சொத்துக்கான ஒதுக்கம்	
(4)	வெளிச்சுமை கூலி	

17) பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களுக்குமான தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கருவினை குறிப்பிடுக.

(1) இருப்பானது கிரயம், தேறிய நிகரப் பெறுமதியில் குறைவான பெறுமதியினை கருத்திற் கொள்ளல் ....

(2) விற்பனை முற்பனமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. பொறுப்பாக வெளிப்படுத்தல்.

....

(3) இருப்பின் விற்பனைக் கிரயம் ஓர் செலவாகவும் இறுதியிருப்பு ஓர் சொத்தாகவும் நிதிநிலமைக் கூற்றில் பதிவு செய்தல்.

....

(4) காணியின் சந்தைப் பெறுமதி அதிகரித்து சென்ற போதிலும் இதன் கிரயப் பெறுமதியே புத்தகத்தில் காட்டுதல். ....

18) கவிஷா வியாபார நிறுவனம் பின்வரும் தகவல்களை 31.03.2023ல் முடிவடைந்த ஆண்டுக்காக முன் வைத்தது,

01.04.2022ல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 60,000

கடன்பட்டோரிடம் பெற்ற காசு நிரலின் மொத்தம் ரூபா 425,000

கடன் விற்பனை நாளேட்டின் மொத்தம் ரூபா 600,000

மீளப்பெற்ற அறவிட முடியாக்கடன் (இது கடந்த வருடத்தில் பதிவழிக்கப்பட்டது) ரூபா 12,000

விற்பனை திரும்பல் ரூபா 14,000

01.04.2022ல் கடன்பட்டோர் மீதான எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகள் ரூபா 6,000

31.03.2023ல் முடிவடைந்த ஆண்டுக்கான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி?

....

....

19) கணக்கீட்டு எண்ணக்கருசார் சட்டகம் - 2018ன் படி, முழுமையான உண்மையான பிரதிநிதித்துவமாக வெளிப்படுத்துவதற்கு உள்ளடக்கியிருக்க வேண்டிய 03 பண்புகளும் எவை?

....

....

....

20) பின்வரும் கணக்கீட்டு கொடுக்கல் வாங்கல்களின் மூல ஆவணத்தையும், மூல ஏட்டினையும் குறிப்பிடுக.

	கொடுக்கல் வாங்கல்கள்	மூல ஆவணம்	மூல ஏடு
(1)	பெற்ற கழிவு		
(2)	பொருள் பற்று		
(3)	கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு		
(4)	கடன்பட்டோனால் திருப்பிய இருப்பு		

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

21) ஓர் நிறுவனத்தின் இயந்திர திருத்தச் செலவு ரூபா 80,000 இயந்திரக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட வழுவினால் பின்வரும் உருப்படிகளில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என குறிப்பிடுக.

(1) தேறிய சொத்து ....

(2) நடைமுறைச் சொத்து ....

(3) தேறிய இலாபம் ....

(4) நடைமுறை அல்லாத சொத்து ....

22) நிறுவனமொன்றின் வங்கிக் கூற்றின் மீதி 31.03.2023ல் ரூபா 180,000 ஆக காணப்பட்டது. இத்திகதியில் வங்கி கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இனங்கவில்லை. பின்னர் கணக்கேட்டு பரிசீலனையின் போது வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

- நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூ 8000
- வைப்புச் செய்யப்பட்ட காசோலை ரூபா 25000 வங்கியில் வசூலிக்கப்படவில்லை.
- வரைந்து கொடுக்கப்பட்ட காசோலை ரூபா 42,000 வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
- வைப்புச் செய்யப்பட்ட காசோலை ரூபா 12,000 வங்கியால் மறுக்கப்பட்டது.

கணிப்பிடுக.

i. 31.03.2023 ல் சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கு?

....

ii. 31.03.2023ல் நிதி நிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய வங்கி மீதி?

....

23) பின்வரும் வழுக்களினால் தேறிய லாபத்தில் அதிகரிப்பு அல் குறைவு அல் மாற்றமின்மையா ஏற்படும் என எழுதுக.

(1) இறுதியிருப்பை கூட்டி பதிதல் ....

(2) பொருள் பற்று ஏடுகளில் பதியப்படவில்லை ....

(3) வாடகை செலவு வாடகை வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது

....

(4) இருப்பு காசுக்கு விற்பனை வெளித்திரும்பல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது

....

24) மத்தியின் மைந்தன் விளையாட்டுக் கழகம் 01.01.2021ல் 1000 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. வருடாந்த சந்தாப்பணம் அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 1000, 2021ம் ஆண்டுக்கான சந்தாப்பணம் முழுமையாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஏனைய தகவல்கள் பின்வருமாறு,

வருடம்	சேர்த்துக்கொள்ளப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை	பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தா ரூ "000"
2022	1500	2000
2023	2000	4300

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

குறிப்பு : இக்கழகத்தில் முற்பண சந்தா முறைமை பின்பற்றப்படுவதில்லை
கணிப்பிடுக.

i. 31.12.2023ல் முடிவடைந்த ஆண்டுக்காக வருமானச் செலவு கணக்கில் சந்தா வருமானமாக வெளிப்படுத்த வேண்டிய தொகை?

....

....

ii. 31.03.2023 ல் உள்ளவாறான பெறவேண்டிய சந்தா வருமானம்.

....

....

25) சுபா, கரன் பங்காளர்களைக் கொண்ட பங்குடமையில் இருந்து பின்வரும் தகவல்கள் 31.03.2023ல் முடிவடைந்த ஆண்டிற்காக பிரித்தெடுக்கப்பட்டது.

பங்காளர் பகிர்வு கூற்று

		ரூபா	ரூபா
மூலதன மீதிக்கு 5% வட்டி			
	சுபா	10,000	
	கரன்	40,000	50,000
லாப பகிர்வு	சுபா	40,000	
	கரன்	20,000	60,000

மேற்படி கணக்கானது நிறுவனத்தின் கணக்கீட்டு பயிலுனரால் பங்குடமையின் ஒப்பந்தம் கவனத்தில் கொள்ளப்படாது தயாரிக்கப்பட்டது. ஆனால் இப்பதிவுகள் பங்காளர் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. பங்காளர் லாபம் / நட்ட பகிர்வு விகிதம் 3:2, பங்காளர் மூலதனத்திற்கு வட்டி கணிப்பிடுவதற்கான ஏற்பாடு எதுவும் ஒப்பந்தத்தில் காணப்படவில்லை.

31.03.2023ல் பங்காளர் நடைமுறைக் கணக்கை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவினைத் தருக.

....

....

....

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024

National Field Work Centre, Thondaimanaru

3rd Term Examination - 2024

கணக்கீடு
Accounting

Gr. 12 (2024)

33	T	II

அறிவுறுத்தல்கள் :

- ➢ முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
- ➢ புதிய வினாவிற்கான விடையினை புதிய பக்கத்தில் ஆரம்பிக்கவும்.
- ➢ பொருத்தமான செய்முறைகளை இணைத்து மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கவும்.

பகுதி II

01) சிவா, தாஸ், பங்குடமையொன்றின் பங்காளர்களாவர் அவர்களது ஒப்பந்தம் வருமாறு,

- லாப / நட்ட விகிதம் 3:2
- பங்காளர் மூலதனத்திற்கு 10% வருடாந்த வட்டி வழங்கப்படும்.
- பங்காளர்கள் முறையே மாதாந்தம் ரூபா 5000, ரூபா 2500 சம்பளம் பெற உரித்துடையவர்களாவர்.
- பங்குடமையானது பங்காளன் தாஸ்ஸிற்கு சொந்தமான கட்டிடித்தில் இயங்குவதனால் வருடாந்தம் ரூபா 25000 வாடகை செலுத்தப்பட வேண்டும்.

31.03.2023 ல் பரீட்சை மீதி வருமாறு,

விபரம்	வரவு	செலவு
பங்காளர் மூலதனம் சிவா		500,000
தாஸ்		300,000
பங்காளர் நடைமுறைக் க/கு 01.04.2022		
சிவா		80,000
தாஸ்	30,000	
பற்றுக்கள் சிவா	25,000	
தாஸ்	15,000	
விற்பனை		1050,000
கொள்வனவு	540,000	
தேறிய சம்பளம்	63,000	
மின்சாரம்	18,000	
காப்புறுதி	25,000	
வங்கிக்கடன் வட்டி	3,000	
10% வங்கிக்கடன்		200,000
கழிவுகள்	12,000	14,000
வியாபார வருமதி, சென்மதிகள்	223,000	100,000
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	900,000	
01.04.2022 ல் பெறுமானத் தேய்வு ஒதுக்கம்		230,000
வியாபார வருமதி மீதான எதிர்பார்க்கை நட்டம்	10,000	

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

01.04.2022 எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகள்		6,000
விளம்பரம்	16,000	
பங்காளர் சம்பளம்	45,000	
பங்காளர் மூலதன வட்டி	40,000	
01.04.2022 ல் இருப்பு	50,000	
உட்சுமை கூலி	8,000	
12% முதலீடுகள்	250,000	
வங்கி மீதி	215,000	
முதலீட்டின் மீதான வட்டி		8,000
	2,488,000	2,488,000

மேலதிக தகவல்கள்

(1) 31.03.2023ல் இருப்பின் கிரயம் ரூபா 85,000 இதன் தேறிய நிகரப் பெறுமதி ரூபா 80,000

(2) வியாபார வருமதியில் ரூபா 15,000 இனை எதிர்பார்க்கை நட்டமாக பதிவழிக்க வேண்டும். மேலும் இறுதி வியாபார வருமதி மீது 10% எதிர்பார்க்கை நட்டத்திற்கான படியினை சீராக்கம் செய்ய வேண்டும்.

(3) 31.03.2023ல் நின்ற செலவுகள் வருமாறு

மின்சாரம் ரூபா 13,000 விளம்பரம் ரூபா 12,000

(4) நிறுவனம், ஊழியர் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15%, 10% பங்களிப்பு செய்கின்றனர். மேலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 5% நிறுவனத்தினால் பங்களிப்பு செய்யப்படுகின்றது. பரீட்சை மீதியில் தரப்பட்ட தேறிய சம்பளமானது ஊழியர் பங்களிப்பு கழிக்கப்பட்டு தரப்பட்டுள்ளது தவிர வேறு எப்பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) பரீட்சை மீதியில் தரப்பட்ட ஆதனம் பொறி மற்றும் உபகரணம், ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான ஒதுக்கத்தின் உள்ளடக்கங்களின் விபரம் பின்வருமாறு தரப்படுகின்றது.

விபரம்	கிரயம்	பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கம் 1.4.2022
ஆதனம்	400,000	80,000
பொறி	300,000	90,000
உபகரணம்	200,000	60,000
	900,000	230,000

ஆதனம் பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் 10% தேய்விடப்படுகின்றது.

நிதியாண்டில் ரூபா 100,000 கிரயமான உபகரணங்கள் 1.10.2022ல் கொள்வனவு செய்யப்பட்டது. இது தவறுதலாக கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

(6) வங்கிக் கடனானது 01.01.2023ல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

(7) பங்காளர்கள் நிதிவருடத்தில் தமது ஆறு மாத (06) சம்பளத்தையும், மூலதன வட்டியினையும் எடுத்திருந்தனர். இது பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(8) பங்குடமையானது தனது காசுக் கொடுக்கல் வாங்கல்களை வங்கி நடைமுறைக்கணக்கினூடாக மேற்கொள்கின்றது. 31.03.2023ல் வங்கிக்கட்டுப்பாட்டு கணக்கு வங்கி கூற்று மீதியுடன் இணங்கவில்லை. காரணங்கள் வருமாறு,

வங்கிக்கட்டணம் ரூபா 3000

கடன்பட்டோர் நேரடி வைப்பு ரூபா 8000

செலவினத்திற்கு எழுதிக்கொடுக்கப்பட்ட காசோலை ரூபா 12,000 வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

வேண்டப்படுவது,

I. 31.03.2023ல் முடிவடைந்த நிதி வருடத்திற்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பங்காளர் பகிர்வு கூற்று உட்பட)

II. 31.03.2023ல் உள்ளவாறான பங்குடமையின் நிதி நிலமைக் கூற்று. (20 புள்ளிகள்)

02) அசாத் நிறுவனத்தின் 01.04.2023ல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் பின்வருமாறு,

	ரூபா "000"
கட்டிடம்	500
தளபாடமும் உபகரணங்களும்	350
இருப்புக்கள்	90
வியாபார வருமதிகள்	150
வங்கி	200
வியாபார சென்மதி	160
அட்டுறு செலவினம்	50

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஏப்ரல் 2023 ல் இடம்பெற்றவையாகும்.

இல	திகதி	கொடுக்கல் வாங்கல்கள்
1	02/04	இருப்புக்கள் விற்பனை ரூபா 40,000 இதன் விற்பனைக்கிரயம் ரூபா 22,000
2	06/04	கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை ரூபா 270,000 அனுமதித்த கழிவு ரூபா 3,000
3	08/04	இருப்புக்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா 120,000
4	10/04	இருப்புக்கள் கடனுக்கு ரூபா 80,000ற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனையில் இலாப வீதம் 25%
5	14/04	2023 மார்ச் மாதத்திற்கான மின்சாரப்பட்டியல் காசோலை மூலம் செலுத்தப்பட்டது. ரூபா 9,000
6	18/04	கடன்கொடுத்தோன் மீதியான ரூபா 95,000 னை தீர்ப்பதற்காக ரூபா 90,000 இற்கான காசோலை செலுத்தப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட கழிவு ரூபா 5,000
7	21/04	கடன்பட்டோரால் திருப்பியனுப்பப்பட்டது ரூபா 20,000 இவ் விற்பனை 10.04.2023ல் மேற்கொள்ளப்பட்டது.
8	23/04	காப்புறுதிக்காக செலுத்தப்பட்ட காசோலை ரூ.30,000இக் கொடுப்பனவு 2023 மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்காக சம மாத கட்டணங்கள் ஆகும்.
9	28/04	இருப்புக்கள் விற்பனை ரூபா 150,000 இதன் விற்பனைக்கிரயம் ரூபா 100,000 விற்பனையின் போது ரூபா 100,000 காசு மட்டும் பெற்றுக்கொள்ளப்பட்டது.
10	30/04	உரிமையாளர் சொந்த தேவைக்காக பயன்படுத்திய இருப்புக்களின் பெறுமதி ரூபா 10,000

மேலதிக தகவல்கள்

I. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் 12% தேய்விடப்படுகின்றது.

II. வியாபார வருமதியாளன் மீது 10% வருமதியாளர் மீதான எதிர்பார்க்கை நட்டத்திற்கான படியினை ஒதுக்குக.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

வேண்டப்படுவது,

I. பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டு மாதிரியை பயன்படுத்தி 1 தொடக்கம் 10 வரையான கொடுக்கல் வாங்கல்களுக்கான தாக்கத்தினை பதிவு செய்க.

இல	ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	இருப்பு	வியாபார வருமதியாளன்	முற்பண செலவு	வங்கி	வியாபார சென்மதியாளன்	ஈட்டுறு செலவு	உரிமை
மீதி								
1								
2								
3								

II. 30 ஏப்ரல் 2023ல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக் கூற்றினை தயார் செய்க.

(20 புள்ளிகள்)

03) சிற்றி வியாபார நிறுவனத்தின் 2023 டிசெம்பர் மாதத்திற்கான பின்வரும் வங்கிக்கூற்று தரப்படுகின்றது.

திகதி	விபரம்	வரவு	செலவு	மீதி
1/12	மீதி 01.12.2023			40,000
5/12	காசு வைப்பு		20,000	60,000
7/12	காசோலை வைப்பு - 580 603		5,000	65,000
11/12	காசோலை வைப்பு - 630 852		12,000	77,000
13/12	நேரடி பெறுவனவுகள் - பங்குலாபம்		7,000	84,000
17/12	காசோலை – 380 307	3,000		81,000
20/12	காசோலை - 380 301	5,000		76,000
22/12	நிலையான கட்டளை – கடன் தவணைப்பணம்	12,000		64,000
26/12	காசோலை வைப்பு - 412 111		3,000	67,000
30/12	வங்கிக் கட்டணம்	500		65,500
31/12	காசோலை - 380 308	2,500		63,000

மேலதிக தகவல்கள்

(1) 01.12.2023ல் வங்கி இணக்க கூற்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்

380 301 ரூபா 5,000

380 302 ரூபா 8,000

வைப்புச் செய்யப்பட்ட ஆனால் வங்கியால் வசூலிக்கப்படாத காசோலைகள்

580 603 ரூபா 5,000

180 808 ரூபா 7,000

(2) 2023 டிசெம்பர் மாத்ததிற்கான வங்கிக்கூற்றில் பின்வரும் காசோலைகள் இடம்பெறவில்லை.

கொடுப்பனவுக்காக வழங்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்

கா.இல 380 305 ரூபா 5,000

கா.இல 380,306 ரூபா 8,000

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

வைப்புச்செய்யப்பட்டு வங்கியினால் வசூலிக்கப்படாத காசோலைகள்

கா.இல 160 260 ரூபா 5,000

கா.இல 312 261 ரூபா 7,000

வேண்டப்படுவது,

i. 2023 டிசெம்பர் மாதத்திற்கான வங்கி கட்டுப்பாட்டு கணக்கு

ii. சீராக்கப்பட்ட வங்கிக் கட்டுப்பாட்டு கணக்கு

iii. 31/12/2023ல் வங்கி இணைக்ககூற்று

04) ரதி வியாபார நிறுவனம் கடன் விற்பனையுடன் தொடர்புபட்ட பின்வரும் தகவல்களை வழங்கியது. 01/11/2023ல் மீதிகள் வருமாறு,

	ரூபா
மது	25,000
சேது	35,000
வாசு	(10,000)

2023 நவம்பர் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள்.

வியாபார வருமதி	கடன்விற்பனை VAT 10% உள்ளடங்கலாக	பெற்றகாசு	அனுமதித்த கழிவு	உட்திரும்பல் VAT 10% உள்ளடங்கலாக
மது	110,000	95,000	5,000	11,000
சேது	220,000	225,000	5,000	–
வாசு	275,000	145,000	15,000	5,500
சரவணன்	242,000	210,000	10,000	5,500
	847,000	675,000	35,000	22,000

நிறுவனம் பெறுமதிசேர் வரிக்காகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். பெறுமதிசேர் வரி 10%. 01/11/2023ல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கும் கடன்பட்டோர் பேரேட்டு கணக்குகளும் இணங்கியிருந்தது. ஆனால் 30/11/2023ல் இவையிரண்டும் இணங்கவில்லை. காரணங்கள் வருமாறு,

I. வாசுவிற்கு கடன் விற்பனை, விற்பனை நாளேட்டின் விற்பனை நிரலில் ரூபா 25,000 என பதியப்பட்டுள்ளது. ஆனால் (VAT) பெறுமதி சேர் வரி நிரலிலும் கடன்பட்டோர் பேரேட்டிலும் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

II. சரவனனால் திருப்பி அனுப்பப்பட்ட இருப்புக்கள் தொடர்பில் விற்பனை திரும்பல் நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

III. மதுவிடம் பெற்ற காசு காசுப் பெறுவனவு நாளேட்டில் ரூபா 59,000 என பதிவு செய்யப்பட்டுள்ளது.

IV. கடன்பட்டோன் சேது மீது ரூபா 10,000 எதிர்பார்க்கை நட்டமாக பதிவழிக்கப்பட்டது. இது தொடர்பாக ஏடுகளில் பதிவுகள் இடம்பெறவில்லை.

V. காசுப்பெறுவனவு நாளேட்டின் கொடுத்த கழிவு நிரல் ரூபா 20,000 இனால் குறைத்து கூட்டப்பட்டது.

வேண்டப்படுவது,

i. விற்பனை நாளேடு, விற்பனை திரும்பல் நாளேடு? (சீராக்குவதற்கு முன்னர்)

ii. சீராக்கமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு, சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு.

iii. நிதி நிலமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதி (நிறுவனம் எதிர்பார்க்கை நட்டத்திற்கான படியினை 10% மாக சீராக்கம் செய்கின்றது) *(20 புள்ளிகள்)*

05) “JCC” பழைய மாணவர் சங்கம் 31/12/2023ல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தகவல்களை வெளிப்படுத்தியது.

I. சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமாறு,

	01.01.2023 ரூபா "000"	31.12.2023 ரூபா "000"
கட்டிடங்கள்	300	?
கணனி உபகரணங்கள்	300	360
பெற வேண்டிய சந்தா	50	?
முற்பணமாக பெற்ற சந்தா	20	30
ஆயுள் அங்கத்தவர் நிதியம்	200	?
வங்கி மீதி	75	?

II. வருடாந்த அங்கத்துவ கட்டணம் அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 1,000, மேலும் 31.12.2023ல் 200 அங்கத்தவர்கள் கழகத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். நிதியாண்டில் பெற்றுக்கொண்ட சந்தா விபரம் வருமாறு,

2022ம் ஆண்டுக்கானது	ரூபா	40,000
2023ம் ஆண்டுக்கானது	ரூபா	170,000
2024ம் ஆண்டுக்கானது	ரூபா	30,000
		240,000

III. நிதி வருடத்தில் இருந்து 10 வருடங்களுக்கு ஆயுள் அங்கத்துவப் பணம் பதிவழிக்கப்பட வேண்டும்.

IV. 31.12.2023ல் முடிவடைந்த ஆண்டுக்கான கொடுப்பனவுகள் வருமாறு,

	ரூபா “000”
மின்சார கட்டணம்	60
சம்பளம்	40
வாடகை	15
நன்கொடை	15
ஏனைய செலவுகள்	30
வங்கி கட்டணம்	12
கணனி கொள்வனவு	100

V. கட்டிடங்கள், கணனி உபகரணங்கள் புத்தக மீதியில் 10% பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

வேண்டப்படுவது,

i. *JCC* பழைய மாணவர் சங்கத்தின், 31.12.2023ல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு?

ii. 31.12.2023ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவு கணக்கு.

iii. 31.12.2023ல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று

(20 புள்ளிகள்)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

06) I. ஆருஸ் அலுமாரி உற்பத்தி நிறுவனம் 31.03.2023 முடிவடைந்த மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் வருமாறு,

01.03.2023ல் மீதிகள்	ரூபா
மூலப்பொருள் - மரம்	30,000
குறைவேலை	25,000
முடிவுப்பொருள் (02 அலுமாரி)	50,000

2023 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

	ரூபா "000"
மூலப்பொருள் - மரம் கொள்வனவு	150,000
விற்பனை (அலுமாரிகள் 10)	400,000
உட்சுமை கூலி – மரம்	10,000
வழங்குனருக்கு மூலப்பொருள் திருப்பி அனுப்பியது	15,000
நேர்கூலி – தச்சு தொழிலாளி	25,000
தனியுரிமைக் கட்டணம்	15,000
மின்சாரம் - தொழிற்சாலை	20,000
வாடகை – தொழிற்சாலை	10,000
மேற்பார்வையாளர் சம்பளம்	30,000
இயந்திர பராமரிப்பு செலவு	18,000
காப்புறுதி – தொழிற்சாலை	13,000

II. இயந்திரம் கிரயத்தில் ரூபா 400,000 பெறுமானத்தேய்வு கிரயத்தில் 12% நேர்கோட்டடிப்படையில் செய்யப்படுகின்றது.

III. 31.03.2023ல் அட்டுறு செலவினங்கள்

- வாடகை ரூபா 5,000
- மேற்பார்வையாளர் சம்பளம் ரூபா 15,000

IV. மார்ச் மாதத்தில் 10 அலுமாரிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

V. 31.03.2023ல் மீதிகள் வருமாறு

மூலப்பொருள் - மரம் ரூபா 35,000

குறைவேலை - ரூபா 30,000

முடிவுப்பொருள் இருப்பு ரூபா ?

VI. குறைவேலை இருப்பு மூலக்கிரயத்தில் கனிப்பிடப்படுகின்றது.

VII. 01.03.2023ல் இருந்த அலுமாரிகள் அனைத்தும் 2023 மார்ச் மாதத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது,

i. 31.03.2023ல் முடிவடையும் மாதத்திற்கான உற்பத்தி கிரயக்கூற்று?

ii. அலுமாரி ஒன்றிற்கான கிரயம் யாது?

iii. 31.03.2023ல் முடிவுப் பொருள் இருப்பின் கிரயம் யாது?

(20 புள்ளிகள்)